# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 16 வெள்ளிக்கிழமை 01.08.2025 கதிர் 272



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel






### அர்ச்சுனாவின் எம்.பி. பதவியை இரத்துச் செய்யக் கோரும் மனு:

# ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கிய நீதிமன்றம்

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யுமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு, இன்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான 7

## ரோஹிதவின் மருமகன் பிணையில் விடுதலை



புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடியைப் பிணையில் விடுதலை செய்யுமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்திய வாகனம் ஒன்றைச் சட்டவிரோதமாகப் பதிவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவர் ஜூலை மாதம் 24ஆம் திகதி காலை மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டமையின் வடிவமே செம்மணி

### அகழ்வு நடவடிக்கைகளை இன்று நேரில் பார்வையிட்ட பின் சிறீதரன் தெரிவிப்பு



**செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு அவசியம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.**

**தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டமையின் வடிவமே செம்மணி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.** 7

## முன்னாள் அமைச்சர் சந்திரசேனவுக்குப் பிணை




விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று வெள்ளிக்கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது தனது 7

## கொழும்பில் 15 வயது மாணவி தவறான முடிவெடுத்து மரணம்



கொழும்பு - ஹோமாகம பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று நுகேகொடை பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 7

## நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் சாவு!



குளத்தில் நீராடிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் 7

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸார் பணி இடைநிறுத்தம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் மாலைதீவு சென்று மீண்டும் நாடு திரும்பிய போது, அவருடன் சென்றிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விமான நிலைய டியூட்டி ப்ரீ வணிக நிலையங்களில் சட்டவிரோதமான முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்ததால் இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.



# இலங்கைக்கான தீர்வை வரி வீதத்தை 20% ஆகக் குறைத்துள்ளது அமெரிக்கா!

கொழும்பு, ஓக 02

இலங்கையிலிருந்து, அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 30மூ தீர்வை வரி வீதத்தை அமெரிக்கா 20மூ ஆகக் குறைத்துள்ளது.

வெள்ளைமாளிகையின்அறிக்கையின்படி, இலங்கை உட்பட சில நாடுகளுக்கு விதிக்கப்படும் வரி வீதங்கள் இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி தெற்காசிய நாடுகளான பங்களாதேஷுக்கு 35மூ இலிருந்து 20மூ ஆகவும், பாகிஸ்தானுக்கு 30மூ இலிருந்து 19மூ ஆகவும் வரி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி வீதம் மாற்றப்படவில்லை. அதன்படி 25மூ ஆகவே நீடிக்கின்றது.

மற்றும் பிரேசிலுக்கு விதிக்கப்பட்ட 50மூ வரி வீதம் 10மூ ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகளில் ஒன்றான இஸ்ரேலுக்கு விதிக்கப்படும் வரி வீதம் 15% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

குறைக்கப்பட்ட வரி வீதங்களில் மிக உயர்ந்த வீதமாக சிரியாவுக்கு 41மூ வரி விதிக்கப்படுகிறது. அதேவேளை லாவோஸ் மற்றும் மியான்மாருக்கு தலா 40மூ வரி விதிக்கப்படும் என வெள்ளை மாளிகையின் அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணி வரைபடங்களை இன்று முதல் இணையத்தில் பெறலாம்– நில அளவைத் திணைக்களம்!

*கொழும்பு, ஓக 02*

*இன்று முதல் காணி வரைபடங்களை இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்என நில அளவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*நில அளவைத் திணைக்களத்தின் 225ஆவது ஆண்டு விழா நேற்றையதினம் இடம்பெற்றது. இதன்போது நில அளவையாளர் நாயகம் வை.ஜி.ஞானதிலக மேற்கூறியுள்ள விடயத்தை தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,*

*நில அளவைத் திணைக்களத்தின் இணையத்தளம் வழியாக இணையவழி கட்டணம் செலுத்துவதன் மூலம் காணி அளவீட்டு வரைபடங்களை பெறமுடியும்.*

*காணி உரிமைச் சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் நில அளவை வரைபடங்களும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் சுமார் 2.4 மில்லியன் நில அளவை வரைபடங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும், இது காணி தகவல் சேவைகளை நெறிப்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது*



# அதிவேக வீதிகளில் பயணம் செய்வோருக்கான முக்கிய அறிவித்தல்!

கொழும்பு, ஓக 02

அதிவேக வீதிகளில் பயணிக்கும் பயணிகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் விசேட அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

2025 செப்டம்பர் 1 முதல் அதிவேக வீதிகளில் பயணிக்கும் பயணிகள், பேருந்துகளில் உள்ள அனைத்து பயணிகளும் சீட் பெல்ட் அணிவதை கட்டாயமாக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி இன்று முதல் அதிவேக வீதிகளில் பயணிக்கும் இலகுரக வாகனங்களின் பின்புற இருக்கைகளில் பயணிப்பவர்கள் சீட் பெல்ட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் இன்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பொறியியலாளர் ஏ.பி. சந்திரபாலா இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

2025 செப்டம்பர் 1 முதல், அதிவேக வீதிகளில் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளில் சாரதி உட்பட அனைத்து பயணிகளும் சீட் பெல்ட் அணிவதை கட்டாயமாக்கும் இலக்கை அடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது- என்று தெரிவித்தார்.



# வவுனியா மாநகரசபை அமர்வில் கடும் குழப்பம் ஆளும் - எதிர்கட்சி இடையே வாக்குவாதம்





வவுனியா மாநகர சபையில் சோலை வரி தொடர்பில் அமைதியின்மை ஏற்பட்டு ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாநகர சபையின் இரண்டாம் அமர்வு முதல்வர் சு.காண்டீபன் அவர்கள் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு

கடந்த அமர்வில் சோலை வரி தொடர்பில் குடியிருப்புக்களுக்கு 8 வீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு 10 வீதமாகவும் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

குறித்த விடயம் ஆளுனரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக முதல்வர் சபைக்கு தெரியப்படுத்தினார்.

இதன்போது, சோலை வரி அறவீடு தொடர்பாக சரியான தகவல்கள் தமக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும், சபை முதல்வர் தவறான தகவல்களை வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனவும், குடியிருப்பு வரியை 5 வீதமாக குறைக்க வேண்டும் என சுயேட்சை உறுப்பினர்களான சி.பிறேமதாஸ், சி.கிரிதரன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான க.விஜயகுமார், க.கிருஸ்ணதாஸ், சி.சிவசங்கர், இலங்கை தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களான முனாவர், பர்சான், லலித், விபுலகுமார ஆகியோர் கோரிக்கையை முன்வைத்து கருத்துக்களை முன்வைத்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சபை முதல்வர், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய குடியிருப்புகளுக்கு 8 வீதம் அறவிட வேண்டும் எனவும், இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு விட்டது எனவும் தெரிவித்ததுடன், சபைக்கு வருமானம் தேவை எனவும் கூறி தனது கருத்தை முன்வைத்தார்.

இதன் போது சபை உறுப்பினர்களான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எம்.லரீப், அப்துல் பாரி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சி.அருணன், தமிழ் தேசிய மக்கள் முன்னனியைச் சேர்ந்த தர்மரட்ணம் மற்றும் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன் ஆகியோர் சபை முதல்வருக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தனர்.

சபைக்கு வருமானம் தேவை என்பதற்காக

இதனால் ஒரு மணிநேரத்திற்கு மேலாக சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீளப் பெற்று விசேட அமர்வு ஒன்றின் மூலம் சோலை வரி அறவீடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சபைக்கு வருமானம் தேவை என்பதற்காக கிராம மக்கள் பாதிக்கப்படக் கூடாது என சபை உறுப்பினர்களான பிறேமதாஸ், விஜயகுமார், சிவசங்கள், முனாவர் ஆகியோர் தொடர்ந்தும் குரல் எழுப்பிய நிலையில் முதல்வரும் அதற்கு பதில் அளிக்க சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

சுமார் ஒரு மணிநேரமாக நடந்த விவாதத்தையடுத்து இது தொடர்பில எழுத்து மூலம் தாருங்கள விசேட அமர்வு நடத்தலாம் என முதல்வர் அறிவித்தார்.

குறிக்கிட்ட எதிகட்சி உறுப்பினர்கள் நாம் ஏற்கனவே 10 பேர் கையொப்பம் இட்டு கடிதம் வழங்கியுள்ளதாக தெரிவித்தனர்.

இதனையடுதது இது தொடர்பில் தொடந்தும் கலந்துரையாடுவதாக தீர்மானிக்கப்பட்டு அடுத்த விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. (ஐ)

## தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டப் பிரதானிகளுடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஓக 02

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டம் 2025-2029 செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட தேசிய செயற் குழு மற்றும் அது குறித்து பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதானிகளுடனான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30) பிற்பகல் நடைபெற்றது. 'வளமான நாட்டை நோக்கி' என்ற தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் எண்ணக்கருவின்படி ஏப்ரல் 09 ஆம் திகதி 'தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டதுடன், இது 2025 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் தொடர்பான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களின் பிரதானிகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்ற அவர்கள் செயற்பாட்டுத்திட்டத்தைத்தயாரிக்க வேண்டும்என்றும், அந்த செயற்பாட்டு திட்டங்களின் முன்னேற்றத்தை தேசிய செயற் குழு அவ்வப்போது மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்த தேசிய செயற் குழு அரச மற்றும் தனியார் துறைகளின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இந்த குழுவின் தலைவராகவும், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க, குழுவின் உப தலைவர் மற்றும் அழைப்பாளராகவும் செயற்படுவார்கள். (ஐ)

## ஊழல் விசாரணைகள் குறித்து ஜனாதிபதி விசேட தகவல்

இலங்கை விரைவில் யாரும் லஞ்சம் வாங்குவதை நினைத்தும் பாரக்க முடியாத நாடாக மாறும் என்றும், சட்டம் அனைவருக்கும் சமமாக அமல்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறுகிறார். ஊழலில் ஈடுபடுவதற்கும் லஞ்சம் கேட்பதற்கும் மக்கள் பயப்பட வேண்டியிருந்தாலும், தற்போது அவர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று நம்புகிறார்கள், மேலும் இதுபோன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள் என்று ஜனாதிபதி கூறினார்.

“மக்கள் லஞ்சம் கொடுக்கவும் வாங்குவதற்கும் பயப்பட வேண்டும். மக்கள் சட்டத்திற்கு பயப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற ஒரு அரசை நாங்கள் கட்டியெழுப்புவோம். முன்னாள் ஐஜிபி, முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் சிறைச்சாலைகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள குடிவரவு மற்றும் சுங்கம் போன்ற அரச அதிகாரிகள் உட்பட பல உயர் அதிகாரிகள் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்,” என்று அவர் கூறினார்.

முந்தைய அரசாங்கங்களால் ஆட்சி மாற்றங்களின் போது தடுக்கப்பட்ட பல்வேறு வழக்குகளை விசாரிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (ஊஐனு) புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். “எங்கள் சட்டங்களின்படி ரூ. 2.6 மில்லியன் நிதி மோசடிக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் நமது கணக்கீடுகளை மேற்கொண்டால், சிலர் பல வாழ்நாள் சிறைத்தண்டனையை எதிர்கொள்ள நேரிடும்,” என்று அவர் மேலும் கூறினார்.

மாலைதீவில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரைச் சந்திக்கும் நிகழ்வில் நேற்று நடைபெற்ற போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (ஐ)

## 2,000 கோரி துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்



கொழும்பு, ஓக 02

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 2000 ரூபாவாக உயர்த்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி வியாழக்கிழமை (31) அன்று ஹட்டன் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர் மையம், சமூக நீதிக்கான மலையக மக்கள் இயக்கம் மற்றும் மக்கள் போராட்ட இயக்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களால் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 2000 ரூபாவாக அதிகரித்தல், தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத சம்பளம் வழங்குதல், லயன் அறைகளுக்குப் பதிலாக நிலம் வழங்குதல், தோட்ட அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் குடியுரிமை வழங்குதல், சிவில் விவகாரங்களுக்கு இடையூறாக இருக்கும் தோட்ட அதிகாரிகளின் அதிகாரத்தை ஒழித்தல், பகல் நேர பராமரிப்பு மைய வசதிகளை விரிவுபடுத்துதல், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்குத் தீர்வுகளை வழங்குதல், உயர்தர அறிவியல், கணிதம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களுக்கான தமிழ் மொழி கல்வி முறையை விரிவுபடுத்துதல், மலையக மக்களைத் தேசிய சமூகத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வது போன்ற பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (ஐ)

# 2026ல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை பெற்று ஆட்சியை பிடிக்கும்



2026ல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக கூட்டணி பெரும்பான்மை பெற்று ஆட்சியை மீண்டும் பிடிக்கும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார். சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ சந்தித்தார். சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் வைகோ சந்தித்தார். அண்மையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய முதலமைச்சரை சந்தித்து நலம் விசாரித்தார். பின்னர், செய்தியாளர்களை சந்தித்த அவர்,

2026ல் கூட்டணி அரசு அமையாது: வைகோ

2026ல் கூட்டணி அரசு அமையாது என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ திட்டவட்டமாக தெரிவித்தார். 2026ல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக கூட்டணி பெரும்பான்மை பெற்று ஆட்சியை மீண்டும் பிடிக்கும். திமுகவில் இருந்து மதிமுக வெளியேறுவதாக சில ஊடகங்கள் அபாண்டமான செய்திகள் வெளியிட்டதாக வைகோ கண்டனம் தெரிவித்தார். பாஜகவுடன் இம்மிளவும் மதிமுக உறவு வைத்துக் கொள்ளாது.

ஆணவக் கொலையை தடுக்க சட்டங்கள் இயற்ற வேண்டும்:

ஆணவக் கொலையை தடுக்க கடுமையான சட்டங்கள் இயற்ற வேண்டும். கவின் கொலை வழக்கில் காவல்துறை தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து எதிர்க்கட்சிகள் முழக்கம்

பீகார் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டனர்.


முதலமைச்சர் மருத்துவமனையில் இருந்தபடி அரசு பணிகளை மேற்கொண்டார்:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே மருத்துவமனையில் இருந்தபடி அரசு பணிகளை மேற்கொண்டார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சுற்றுப்பயணத்தில் மக்கள் திரளானோர் வந்து ஆதரவு தெரிவிக்கின்றனர்.

இந்துத்துவ சக்திகளை எதிர்க்கும் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

இந்துத்துவ சக்திகளை எதிர்க்கும் நிலைப்பாட்டில் எக்காரணம் கொண்டும் மாற்றம் இருக்காது என்றும் தெரிவித்தார். (ஐ)

## மகாராஷ்டிரா சட்டமன்றத்திற்குள் ரம்மி விளையாடிய அமைச்சருக்கு விளையாட்டுத்துறை ஒப்படைப்பு



மகாராஷ்டிரா சட்டமன்றத்திற்குள் ஆன்லைன் ரம்மி விளையாடி சர்ச்சையில் சிக்கிய அமைச்சர் மாணிக்ராவ் கோகட்டேவிடம் இருந்து வேளாண் துறை பறிக்கப்பட்டு, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை வழங்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிர சட்டப்பேரவை கூட்டத்தொடரின்போது, தேசியவாத காங்கிரஸை சேர்ந்த வேளாண் துறை அமைச்சர் மாணிக்ராவ் கோகடே, ரம்மி விளையாடும் காட்சிகள் இணையத்தில் வைரலாகின. இந்த விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகள் தங்களது கண்டனங்களை தெரிவித்தனர்.

இதற்கிடையில், அமைச்சர் தனது செயல்களை நியாயப்படுத்துமாறு பேசி உள்ளார். “கேமரா இருப்பது எனக்குத் தெரிந்தால், நான் ஏன் அங்கே அமர்ந்து விளையாட வேண்டும்? நான் அதைத் தவிர்க்க விரும்பினேன், இரண்டு முறை முயற்சித்தேன், விளையாட்டைத் தவிர்ப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அடுத்த நொடியில், நான் அதைத் தவிர்த்துவிட்டேன் என்று கோகேட் கூறினார்.

இந்நிலையில், அவருக்கு தண்டனையாக வேளாண் துறை பறிக்கப்பட்டு, அவருக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக விளையாட்டுத் துறையை கையாண்ட தத்தத்ராயா பார்னே வேளாண் துறையை நிர்வகிப்பார் என அறிவிக்கப்பட்டது.



## நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்

நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை கைவிட வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். டி.ஆர்.பாலு, ஆ.ராசா, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

## ஐடி நிறுவனங்களில் 12 மணி நேர வேலை திட்டம் வாபஸ்: கர்நாடகா அரசு உத்தரவு

கர்நாடக மாநிலத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஐடிஇஎஸ் ஊழியர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாக அதிகரிக்க முடிவு செய்தது. இதற்காக கர்நாடக கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் திருத்த மசோதா-2025ஐ தாக்கல் செய்யவும் கர்நாடக தொழிலாளர் நலத்துறை நடவடிக்கை எடுத்து வந்தது. தற்போது நாள் ஒன்றுக்கு ஓவர் டைம் சேர்த்து 10 மணி நேரம் வேலை பார்க்கலாம் என்ற விதி அமலில் உள்ளது. அதில் திருத்தம் செய்து 12 மணி நேரம் வேலை பார்க்கலாம் என மசோதாவை அமல்படுத்த கர்நாடக அரசு திட்டமிட்டு இருந்தது. இதை அமல்படுத்தினால் தொழிலாளர்களின் பணி 2 ஷிப்டு முறைக்கு வழிவகுக்கும், ஊழியர்களின் எண்ணிக்கையில் 3-ல் ஒரு பங்கை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே இந்த அறிவிப்பை கர்நாடக அரசு கைவிட வேண்டும் என்று கர நாடக ஐடி ஊழியர்கள் சங்கம் (கேஐடியு) வலியுறுத்தி வந்தது.



பல்வேறு தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தன. தொழிற்சங்கங்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன. இதுதொடர்பாக கர்நாடக தொழிலாளர் நலத்துறையின் கூடுதல் ஆணையர் ஜி.மஞ்சுநாத், தொழிற்சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் 12 மணி நேர வேலை திட்டத்தை வாபஸ் பெறுவதாக ஜி.மஞ்சுநாத் அறிவித்தார். இதற்கு தொழிலாளர் நலத்துறை மற்றும் கர்நாடக அரசுக்கு நன்றி தெரிவித்தனர். அதுபோல் கர்நாடக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சந்தோஷ் லாட்டும், 12 மணி நேர வேலை திட்டத்தை கைவிடுவதாக தெரிவித்துள்ளார். இது தொழிலாளர்கள், தொழிற் சங்கங்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்று கே.ஐ.டி.யு. தெரிவித்துள்ளது.





# சிறார் ஏன் வாசிக்க வேண்டும்?

நம் பிள்ளைகளுக்கு வாசிப்பு ஏன் அவசியம்? வாசிப்பு என சொன்னதுமே, பல பெற்றோருக்கும் முதலில் பள்ளிப் புத்தக வாசிப்பு பற்றிய எண்ணமே வந்திருக்கும். உங்களுக்கும் அப்படித்தான் தோன்றியதா? ஆம் எனில், உங்களோடு உரையாடி வாசிப்பு பற்றிய உங்கள் புரிதலை சிறிதளவேனும் மாற்றும் முயற்சிதான் இது.

வாசிப்பு என்றால் பாடம் தாண்டிய பிற நூல்களை வாசித்து அறிவது. வாசிப்பினால் ஒருவர் அறிவதும் அடைவதும் ஏராளம். இடைவிடாத வாசிப்பு ஒருவரை சுற்றியுள்ள உலகம் பற்றிய புரிதலைத் தரும். எந்த திணிப்பும் கட்டாயமும் இன்றி ஒருவர் வாசிக்கும்போது, வாசிப்பு, பேரானந்தமான அனுபவம். அத்தகைய வாசிப்பு, ஒழுக்கம், சமூக அக்கறை, மனிதாபிமானம், பொறுப்புணர்வு, தேடல் ஆகியவற்றை இயல்பாகவே உருவாக்கிடும். தேடித்தேடி வாசித்த ஒரு சிறந்த வாசகர், ஒரு சிறந்த எழுத்தாளராகவும் பிறப்பெடுப்பார்.

ஆனால் தேர்வு என்ற பந்தயத்திற்கு தயார் படுத்தப்படும் குழந்தைகள் அந்தத் தேர்வில் முதலாவதாக தேறி, வெற்றி பெறவேண்டும் என்ற ஒரே குறிக்கோளில்தானே கல்வி கற்கிறார்கள்? நாமும், ‘அந்த வெற்றிக்குக் காரணம் நான்தான், ஒரு பெற்றோராக நான் ஜெயித்து விட்டேன் ’ என நமது தோளை நாமே தட்டிக் கொடுத்து பேரின்பம் அடைகிறோம் இல்லையா?

ஆனால் நாம் அவர்களை சரியான பாதையில்தான் வழிநடத்திக் கொண்டிருக்கிறோமா? அவர்களின் குழந்தைப் பருவம் மகிழ்ச்சியாக இருக்கிறதா? நாம் நமது குழந்தைப் பருவத்தில் அனுபவித்த கொண்டாட்டங்கள், ‘ஜென் அல்பா’ எனச் செல்லமாக அழைக்கப்படும் இந்த தலைமுறை சிறார்களுக்கு கிடைத்துள்ளனவா?

அன்பான பெற்றோரே, ஆசிரியரே, உங்களைச் சுற்றி இருக்கும் குழந்தைகளை ஒரு நிமிடம் ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் மனப்பூர்வமாக மகிழ்ந்திருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? ஆம் எனில், மகிழ்ச்சி. இல்லை சந்தேகம்தான் என்கிற எண்ணம் தோன்றினால், உடனே அந்தக் குழந்தையை அருகில் அழைத்து உரையாடத் தொடங்குங்கள். அந்தக் கேள்விக்கான பதில் நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும்.

இந்த உலகமே போட்டி நிறைந்ததாகி விட்டது. தற்போதைய உலகில் வெற்றியாளர் என்பவர் ‘அதிகமாக சம்பாதிப்பவர்.’ அந்த சம்பாதிக்கும் சக்தியை அதிகரிப்பதே இன்றைய கல்வியின் அடிப்படை நோக்கமாகிப் போனது. எங்கு திரும்பினாலும் கார்ப்பரேட் துறையின் ஆதிக்கம், கணினி அறிவியல், மென்பொருள் செயலிகள் குறியீடாக்கம் என சிறார் ஒருபுறம் இதற்காக தயாராக ஆரம்பித்துவிட்டார்கள். மறுபுறம் செயற்கை நுண்ணறிவு, தானியங்கியல் போன்றவை, ‘ சீக்கிரம் கற்றுக்கொள்! இல்லையேல் வேகமாக வளரும் விஞ்ஞான உலகத்திலிருந்து நீ பின்தங்கி விடுவாய்’ என மிரட்ட ஆரம்பித்துள்ளன.

இதையெல்லாம் இருந்த இடத்திலேயே கற்பிக்கும் திறன்பேசி மற்றும் கணினஇத்தனை வளர்ச்சிகளையும் தாங்க முடியாமல் சுமந்து கொண்டிருப்பவர்கள்தான் இந்த ‘அல்பா தலைமுறை’ சிறார்.

இந்தத் தலைமுறை உலகைக் கண்டறிய, தொழில்நுட்பத்தையே அதிகம் நம்பியுள்ளது. இவர்கள் எல்லாம் பிறந்ததிலிருந்தே புதிய தொழில்நுட்பங்கள் அவர்களின் வாழ்க்கையில் அங்கமாக மாறிவிட்டன. யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே இரண்டு வயது குழந்தை ஸ்மார்ட்போனை அத்தனை லாபகமாக உபயோகப்படுத்துகிறது. ஒரே நேரத்தில் பல திரைகளை பயன்படுத்தி குறைந்த நேரத்தில் பெரிய வேலைகளைக்கூட செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்களாக வளர்கிறார்கள். அதே நேரத்தில் மற்ற செயல்களில் கவனமின்மையையும் கற்றலில் ஆர்வமின்மையையும் இது அதிகப்படுத்துகிறது என்பதை நம்மால் மறுக்க இயலாது. அமெரிக்க உளவியலாளர் ஜீன் எம் ட்வெங்கே தனது ஐஜென் (iGen) புத்தகத்தில் அமெரிக்க சிறார் மற்றும் இளைஞர்களிடத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின் நன்மை, தீமை மற்றும் விளைவுகள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

இளைஞர்கள் பலரும் நண்பர்களுடன் நேரில் தொடர்பு கொள்வதை விட மின்னணு முறையிலேயே அதிகமாகத் தொடர்பு கொள்கிறார்கள். இது அவர்களின் சமூகத்திறனை பாதிக்கிறது. மனச்சோர்வும் பதட்டமும் இந்தத்தலைமுறை இளைஞர்களிடத்தில் அதிகமாகியுள்ளது என குறிப்பிட்டுள்ளார். இவை இன்றைய காலகட்டத்தில் சிறாருக்கும் பொருந்தும் தானே? இதை ஒரு பிரச்னையாக உணர்கிறீர்களா? இல்லை தொழில்நுட்ப வளர்ச்சியில் இவையெல்லாம் இயல்புதானே என்கிறீர்களா?

எல்லா வளர்ச்சியிலும் ஒரு சில எதிர்மறைத் தாக்கங்கள் ஏற்படுவது இயல்புதான். ஆனாலும் அது ஒரு ஒரு தலைமுறையின் சிந்தனைத் திறனை, கற்பனை திறனை, சமூகத்திறனை பாதிக்கிறது என்றால், அதனைத் தடுக்க நாம் விரைவாக ஏதேனும் செய்திட வேண்டும்தானே? இதனை சரிசெய்ய வாசிப்புத் திறன் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. குழந்தைகளிடமிருந்து வாசிப்பை அந்நியப்படுத்தியது, நம் கல்விமுறையின் மாபெரும் வரலாற்றுப் பிழை.

அதற்கு சொல்லப்படும் காரணங்கள்
குழந்தைகள் திறன்பேசிக்கே (SMART PHONE) அதிகம் அடிமையாகிவிட்டார்கள்.


பள்ளிப் பாடம் படிக்க, வீட்டுப்பாடம், சிறப்பு வகுப்புகள் மற்ற விளையாட்டுப் பயிற்சி, என்று நாள் முழுவதும் பரபரப்பாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களால் வாசிக்க இயலாது.

பள்ளிப் பாடங்களை படிப்பதற்கே நேரம் போதவில்லை, இதில் கூடுதலாக புத்தகங்களை எப்படி வாசிப்பது?

இவையெல்லாம் சிறார் வாசிப்புக்குப் பெரும் தடையென்று பொதுவெளியில் சொல்லப்படுகிறது. ஆனால் பெற்றோரும் ஆசிரியர்களும் கொஞ்சம் மனது வைத்தால் இதனை மாற்ற முடியும். ஏனென்றால் ஸ்பெல் பீ, ஒலிம்பியாட் தேர்வுகள் மாதிரியான தளங்களில் தங்கள் பிள்ளை சாதிப்பதையே இங்கு நிறைய பெற்றோர் விரும்புகிறார்கள். புத்தக வாசிப்பினால் அவர்களுக்கு எதுவும் கிடைக்கப்போவது இல்லையாதலால், அதற்கான அவசியமும் இல்லை என்றே நினைக்கிறார்கள்.

ஆதனின் பொம்மை நூலுக்காக 2023 ஆம் ஆண்டிற்கான பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற எழுத்தாளர் உதயசங்கர் அவர்கள், “ஒரு சமூகமாக நமக்கு ஒரு பெரிய பொறுப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன். பெற்றோர்கள் புத்தக வாசிப்புக்குத் திரும்பினால், குழந்தைகளும் அவர்களைப் பின்பற்றுவார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கதைகளைச் சொல்ல வேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நவீன இலக்கியங்களைப் படிக்க வேண்டும். அடுத்து, ஆசிரியர்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார்கள். பள்ளிகளில் பாடத்திட்டத்தைத் தாண்டி வாசிப்பு இல்லை. குழந்தைகளில் அனைத்து வகையான மாற்றங்களையும் கொண்டு வரும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு உண்டு. என் தமிழ் ஆசிரியர் என் வாழ்க்கையில் விதைத்த விதைகளால்தான், நான் இன்று இவ்வாறாக உருவாகியிருக்கிறேன்”, என்று ஒரு நேர்காணலில் கூறியுள்ளார்.

ஆனால் இன்று ஆசிரியர்கள் பலரும் புத்தக வாசிப்பில் பெரிதும் ஆர்வம் இல்லாதர்வர்கள் என்பதும் ஒரு காரணம். நான் நிறைய பள்ளிகளுக்கு புத்தகங்கள் பரிசளித்து எங்களுடைய அறிவொளி வாசிப்புக் குழு பற்றியும் பேசுகையில் ஆசிரியர்கள் பலரும், “பல் மருத்துவர் வேலையை பார்க்காமல் உங்களுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை, இந்தப் பசங்க அவங்களோட பாடப் புத்தகத்தையே வாசிக்க மாட்டானுங்க. இதுல தேவையில்லாம இதை வேற கொடுக்குறீங்க,” என்று கிண்டலாகவே விமர்சித்தார்கள். இவர்களுக்கு சிறார் வாசிப்பின் மகத்துவம் தெரிந்தால் மட்டுமே, குழந்தைகளுக்கு அது சென்றடையும் என்பது நிதர்சனம்.



எல்லா ஆசிரியர்களும் இப்படித்தான் என்று பொதுவாகச் சொல்லிவிட முடியாது. ஆசிரியபயிற்றுநர் எழுத்தாளர் சாலை செல்வம் அவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட சிறார் வாசிப்பு நூல்களை எழுதியுள்ளார். அரசுப் பள்ளி ஆசிரியை எழுத்தாளர் கி. அமுதா செல்வி, ‘வால் முளைத்த பட்டம்’, ‘பசி கொண்ட இரவு’ போன்ற சிறார் புத்தகங்களை எழுதியுள்ளார். இன்னும் பல ஆசிரியர்கள் வாசிப்பு இயக்கங்களை ஒருங்கிணைக்கிறார்கள். தங்கள் பள்ளிக் குழந்தைகளை தங்களது செலவில் நூலகங்களுக்கு, புத்தகக் கண்காட்சிக்கு அழைத்து சென்று, வாசிப்பு உலகை அறிமுகம் செய்கிறார்கள். ஒருசில

(7ஆம் பக்கம் பார்க்க..)

# ரஷ்யாவுடன் சேர்ந்து என்ன செய்தாலும் கவலையில்லை இந்திய பொருளாதாரம் செத்த பொருளாதாரம்:

## அதிபர் டிரம்ப் விமர்சனத்தால் பரபரப்பு, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா சலுகை மேல் சலுகை



இந்தியாவின் பொருளாதாரம் செத்த பொருளாதாரம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கு வரிக்கு மேல் வரி விதிக்கும் அதே வேளையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா சலுகை மேல் சலுகை வழங்கியுள்ளது. இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள் களுக்கு 25 சதவீத வரி மற்றும் கூடுதல் வரி விதிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். தற்போது இந்திய பொருளாதாரத்தை செத்த பொருளாதாரம் என்று அவர் விமர்சனம் செய்துள்ளார்.

இதுபற்றி டிரம்ப் கூறும்போது, ‘இந்தியா ரஷ்யாவுடன் சேர்ந்து என்ன செய்தாலும் எனக்கு கவலையில்லை. ஆனால் இரண்டு நாடுகளும் தங்களின்மோசமான பொருளாதார நிலையை இணைந்து இன்னும் மோசமாக்கும். அவர்களது பொருளாதாரம் செத்த பொருளாதாரம். நாங்கள் இந்தியாவுடன் மிகக் குறைந்த வர்த்தகத்தையே செய்துள்ளோம். ஆனால் அவர்களின் வரிகள் மிக அதிகம், உலகிலேயே மிக உயர்ந்தவை. இந்தியாவின் வர்த்தகக் கொள்கைகள் மிகவும் கடுமையானது மற்றும் அருவருப்பானது.

எல்லாம் நல்லதல்ல! எனவே, ஆகஸ்ட் 1ம் தேதி முதல் இந்தியா 25 சதவீத வரியையும், கூடுதலாக அபராதத்தையும் செலுத்தும்.உக்ரைனில் நடைபெறும் கொலைகளை ரஷ்யா நிறுத்த வேண்டும் என்று அனைவரும் விரும்பும் நேரத்தில், இந்தியா எப்போதும் ரஷ்யாவிடமிருந்து கணிசமான அளவு ராணுவ தளவாடங்கள் மற்றும் எரிசக்தி பொருட்களை வாங்கியுள்ளது’ என்று குறிப்பிட்டார்.

ஒருபக்கம் இந்தியாவுக்கு வரிக்கு மேல் வரி விதித்து வரும் டிரம்ப், இன்னொரு பக்கம் பாகிஸ்தானுக்கு வரிச்சலுகை அறிவித்து இருப்பதுடன், பாகிஸ்தான் நாட்டுடன் கச்சா எண்ணெய் சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்துள்ளார். இது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. ஏற்கனவே பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா கொடுத்த பதிலடி நடவடிக்கையால் இருநாடுகள் இடையே 4 நாட்களாக நடந்த போரை நான் தான் நிறுத்தினேன் என்று கிட்டத்தட்ட 30 தடவை டிரம்ப் கூறிவிட்டார்.

இன்னும் ஒருபடி மேலே சென்று பாக்.ராணுவ தளபதி அசிம் முனீருக்கு நடைமுறைகளை மீறி வெள்ளை மாளிகைக்கு அழைத்து விருந்து கொடுத்து உற்சாகப்படுத்தி உள்ளார். தற்போது பாகிஸ்தானுக்கு சலுகை மேல் சலுகையாக வரிச்சலுகை அறிவித்து இருப்பதும், பாகிஸ்தானில் எண்ணெய் கிணறு அமைக்கவும்அமெரிக்க முடிவு செய்துள்ளது இந்தியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், பாகிஸ்தானின் கடல் பகுதியில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவின் குறிப்பிடத்தக்க இருப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில், பாகிஸ்தான் கடல் பகுதியில் கண்டறியப்பட்ட எண்ணெய் வளம், உலகளவில் நான்காவது பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டன. இந்நிலையில், டிரம்ப்பின் அறிவிப்பு பாக். எண்ணெய் வளத்தை குறிவைத்து நடத்தப்பட்ட ஒன்று என்பது தெளிவாகி உள்ளது.

டிரம்ப்பின் அறிவிப்பு வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம் என்று கூறி பாக். பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்துள்ளார். இது இரு தரப்பினருக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இதுதொடர்பாக ஷெபாஸ் ஷெ ரீப் வெளியிட்டுள்ள பதிவில்,’ அமெரிக்காவில் நமது இரு தரப்பினரும் வெற்றிகரமாக முடித்த வரலாற்று சிறப்புமிக்க அமெரிக்க-பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் தலைமைப் பங்காற்றியதற்காக அதிபர் டிரம்புக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மைல்கல் ஒப்பந்தம் நமது வளர்ந்து வரும் ஒத்துழைப்பை மேம்படுத்தும். இதனால் வரும் நாட்களில் நமது நீடித்த கூட்டாண்மையின் எல்லைகளை விரிவுபடுத்தும்’ என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் நடந்த இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தானின் நிதியமைச்சர் முகமது அவுரங்கசீப், அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி தூ தர் ஜேமிசன் கிரீர் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். இந்த வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பது, சந்தை அணுகலை விரிவுபடுத்துவது, முதலீட்டை ஈர்ப்பது மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் இந்த ஒப்பந்தம் அமெரிக்காவிற்கான பாகிஸ்தான் ஏற்றுமதிக்கான பரஸ்பர வரிகளைக் குறைக்கும். எரிசக்தி, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், ஐடி, கிரிப்டோகரன்சி மற்றும் பிற துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பின் புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளனர். இந்தியாவுக்கு பதில் பாகிஸ்தானுடன் அமெரிக்கா நெருங்குவது உலக அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவுக்கு பாக். எண்ணெய் சப்ளை செய்யலாம்

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில்,’நாங்கள் இப்போதுதான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய எண்ணெய் கிடங்கு உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் கிடங்காக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்’ என்று தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில்,’நாங்கள் இப்போதுதான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய எண்ணெய் கிடங்கு உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் கிடங்காக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்’ என்று தெரிவித்தார்.(ஐ)

## ஈரானிடம் பெட்ரோல் வாங்கிய 6 இந்திய நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் தடை



அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,20 நிறுவனங்கள் ஈரானுடன் தடையை மீறி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன. இதில், 6 இந்திய நிறுவனங்கள் அடக்கம். அந்த நிறுவனங்கள் ஈரானில் இருந்து பெட்ரோலியம், பெட்ரோலிய பொருட்கள் அல்லது பெட்ரோ கெமிக்கல் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன.

இதனால், அந்த நிறுவனங்கள் அமெரிக்காவில் வர்த்தகம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது,என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, அல்கெமிக்கல் சொல்யூஸ்ஷன் பிரைவேட் லிமிடெட், குளோபல் இண்டஸ்டிரியல் கெமிக்கல்ஸ் லிமிடெட், ஜூபிடர் டை கெம் பிரைவேட் லிமிடெட், ரம்னிக்லால் எஸ். கோசலியா அண்ட் கம்பெனி, காஞ்சன்ஸ் பாலிமர் உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்காவில் இனி வணிகம் செய்ய முடியாது. (ஐ)

## சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடும் வெள்ளம்: 80,000 பேர் வெளியேற்றம்



சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடும் வெள்ளம் பாதுகாப்பு கருதி 80,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். பெய்ஜிங் மாகாணத்தில் கடந்த ஒருவாரமாக பெய்து வரும் கனமழையால் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மியூன், யான்கிங் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 9 பேரை காணவில்லை. (ஐ)

## நீரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர். இந்தச் சம்பவம் அநுராதபுரம், நொச்சியாகம பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நொச்சியாகம, பஹுளஹல்மில்லேவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 40 வயதுடையவர் ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹோமாகம, கிரிவத்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இந்த மாணவி சுகயீனம் காரணமாக நீண்ட நாட்களாகப் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்துள்ளார்.

பின்னர் இந்த மாணவி மீண்டும் பாடசாலைக்குச் சென்றுள்ள நிலையில், விடுமுறை எடுத்த நாட்களுக்காக வைத்திய அறிக்கை ஒன்றை வழங்குமாறு பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால், இந்த மாணவி வைத்திய அறிக்கையை வழங்கத் தவறியுள்ளார்.

இதனால் இந்த மாணவிக்குக் கடுமையாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மாணவி பரீட்சைகளிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளதால், பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இதனால் மனதளவில் பாதிக்கப்பட்ட மாணவி தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நுகேகொடை பொலிஸ் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அன்புக்குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த ஜூன் மாதம் 4 ஆம் திகதி காலை முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சேபனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி செனானி தயாரத்ன, இந்த மனு மீதான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யக் கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அதன்படி, நான்கு வாரங்களுக்குள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய நீதியரசர்கள் அமர்வு கால அவகாசம் வழங்கியதுடன், அதில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவித்தது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் சிறீதரன் எம்.பி. இன்று அங்கு சென்றிருந்தார்.

குறித்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணிகளில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு அவசியமானது என்பதுடன், ஸ்கானிங் இயந்திரம் உள்ளிட்ட நவீனத் தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியோடு அந்தப் பகுதியில் முழுமையான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"1995 ஆம் ஆண்டில் இருந்து 2001 ஆம் ஆண்டு வரையும் முழுக்க முழுக்க இராணுவ முகாமாகவும், இராணுவக் கட்டுப்பாட்டு வலயமாகவும் கையகப்படுத்தப்பட்டிருந்த செம்மணிப் பகுதியில் அடையாளம் காணப்படும் மனித என்புத் தொகுதிகள் சாதாரணமாகப் புதைக்கப்பட்டவைதான் என்று கூற முற்படுவது மிக அபத்தமானது.

இந்துக்களின் சடங்குமுறையில் உடலங்களைக் கூட்டாக அடக்கம் செய்வதோ, ஆடைகளற்று அடக்கம் செய்வதோ பின்பற்றப்படுவதில்லை.

அவ்வாறிருக்க ஓர் இனத்தின் பலதசாப்தகாலப் போராட்டத்துக்கான சாட்சியமாக அணுகத்தக்க முக்கியத்துவம் மிக்க விடயமொன்றை மடைமாற்றும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகின்றார்கள்.

அத்தகைய செயற்பாடுகளைக் கடந்து, செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் முழுமையாக நடைபெற்று உண்மைகள் கண்டறியப்படுவதற்காக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தைக் கோரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம்." - என்றும் சிறீதரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கடற்றொழிலாளர் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம்!

ஹிக்கடுவையில் உள்ள தொடண்டுவ மீன்பிடி துறைமுகத்தில் கடற்றொழிலாளர் ஒருவர் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு பிரயோகம் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

நிதி தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்த முயன்ற போதும், துப்பாக்கி இரண்டு முறையும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு தோல்வியடைந்தது.

சந்தேக நபர் இருவரில், ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இஸ்ரேலாக மாறி வரும் அறுகம் குடா- சுற்றுலாப் பயணி கவலை!

*இலங்கையின் அறுகம் குடாவில் இஸ்ரேலிய நாட்டினரின் வருகை மற்றும் வணிகங்கள் அதிகரித்து வருவது குறித்து டிஜே டாம்மோனகின் என்ற சுற்றுலாப்பயணி இன்ஸ்டாகிராமில் காணொளி பதிவு ஒன்றை இட்டு கவலை வெளியிட்டுள்ளார்.*

*அவர் தனது பதிவில்,*

*அறுகம் குடா இலங்கையில் இருப்பதாக நான் நினைத்தேன், ஆனால் அது இஸ்ரேலின் டெல் அவிவில் இருப்பது போல் தெரிகிறது.*

*அறுகம் குடா, இஸ்ரேலியர்களுக்கு வழங்குவதாக 50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாக்குறுதி அளிக்கப்பட்டதா? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.*

*அப்பகுதியில் உள்ள பல்வேறு உணவகங்களின் காட்சிகளைப் பகிர்ந்து கொண்ட டாம்மோனகின், பல இடங்களில் சிங்களம் அல்லது தமிழுக்குப் பதிலாக ஹீப்ரு மொழி பயன்படுத்தப்படுவதையும், சில இடங்களில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளுக்கு ஆதரவான பிரச்சார ஸ்டிக்கர்கள் கூட காட்டப்படுவதையும் சுட்டிக்காட்டினார்.*

*எபிரேய மொழி அந்த பகுதியில் உள்ள உணவகங்களில் பயன்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார்.*

*அறுகம் குடாவில் உள்ளூர்வாசிகளைத் தடைசெய்து இஸ்ரேலியர்கள் நிகழ்வுகளை நடத்தியதையும் அவர் இதன்போது வெளிப்படுத்தினார்.*

*இவ்வாறான நிலைமையை கண்டுகொள்ளாமல் இருப்பதைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# சிறார் ஏன்...

ஆசிரியர்கள் ஒருசில பள்ளிகள் என்றில்லாமல், எல்லா பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கும் இது கிடைக்க வேண்டும்.

சிறார் எழுத்தாளர் சரிதா ஜோ, சிறந்த கதை சொல்லியாக தனது பயணத்தைத் தொடங்கி, இன்று இருபதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். குழந்தைகள் அதிகம் விரும்பும் மாயாஜாலமும் கற்பனைகளும் இணைந்த ஃபேண்டஸி சார்ந்த கதைகளை சிறப்பாக எழுதுபவர். நேர்காணல் ஒன்றில், "ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை அமைக்கும் விதத்தில் சிறார் இலக்கியம் அடித்தளமாக செயல்படுகிறது. பத்து வயதிற்குள் அவர்களுக்கு இருக்கும் சமூகச் சூழல் மற்றும் அவர்கள் வாசிக்கும் புத்தகம்தான், பிற்காலத்தில் அவர்களுடைய ஆளுமையைத் தீர்மானிக்கிறது. சிறார் இலக்கியம் என்பது வெறுமனே பொழுதுபோக்கு அல்ல. அதுதான் வாழ்க்கைப் பயணத்தின் முதல் ஆசான்", என்று கூறியுள்ளார்.

எழுத்தாளர் ஞா.கலையரசி அவர்கள் தனது பேரனுக்காகக் கதை சொல்ல ஆரம்பித்தபோது அவனுக்காக நிறைய புத்தகங்களை வாசித்திருக்கிறார். அத்தோடு புதுப்புது கதைகள் யோசிக்க ஆரம்பித்தாராம். அப்படி யோசித்த கதைகளையெல்லாம் எழுத ஆரம்பித்துள்ளார். இது பெற்றோர் மட்டுமன்றி, தாத்தா பாட்டிகளும் தங்களது குழந்தைகளுக்காக வாசிப்பது எத்தனை சிறந்தது என்பதை உணர்த்துகிறது அல்லவா ?

சிறார் வாசிப்பதால் புதிய எண்ணங்கள் கண்ணோட்டங்கள், யோசனைகள் உருவாகும். அதன் மூலமாக படைப்பாற்றல் மற்றும் கற்பனைத் திறனைத் தூண்டும். சிறந்த புத்தகங்கள் அறிவை விரிவுபடுத்தும். சமூகத் திறனை மேம்படுத்தும். அவர்களின் சொல்லகராதி, மொழித்திறன், செறிவு, நினைவாற்றல் மற்றும் விமர்சன சிந்தனைகளை வளர்க்க உதவும். வாசிப்புத் திறன் மற்றவர்களிடம் கருணையும் புரிதலையும் வளர்க்க உதவும். வாசிப்பு, மன அழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வைக் குறைக்கிறது. வாசிப்பு திறன் கற்றல் மீதான ஆர்வத்தை வளர்க்கவும் வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிக்கவும் உதவும். இது புதிய ஆர்வங்களைக் கண்டறிந்து அதை மேம்படுத்தவும் உதவுகிறது.

வாசிப்பு ஏராளமான தகவல்களை அளிப்பதோடு, அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் நன்கு புரிந்து கொள்ள வழிவகுக்கும். நாகரீகங்கள், பழக்கவழக்கங்கள், கலைகள், வரலாறு, புவியியல், சுகாதாரம், உளவியல் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு தலைப்புகள் மற்றும் கூறுகள் பற்றிய அடிப்படை புரிதலை அவர்களுக்குக் கொடுக்கும். அதுமட்டுமல்ல, சில நேரங்களில் குழந்தைகளிடம் நாம் பேசத் தயங்கும் அத்தியாவசியமான விடயங்களை ஒரு புத்தகம் எளிதாகப் பேசிவிடும் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய 'கயிறு' என்ற சிறிய புத்தகம் குழந்தைகளிடம் ஏற்படுத்திய தாக்கம் பெரியது. சாதி, மதம் பார்க்கக் கூடாது என்கிற சமத்துவச் சிந்தனையை கற்றுக்கொடுக்க பல ஆண்டுகளாக பள்ளிகளும் ஆசிரியர்களும் முயற்சித்துக் கொண்டிருப்பதை 'கயிறு' நூல் எளிமையாக்கி உள்ளது என்றே சொல்லலாம்.

எழுத்தாளர் எஸ். பாலபாரதி எழுதிய 'மரப்பாச்சி சொன்ன ரகசியம்' 2020-ம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான 'பால சாகித்திய புலஸ்கார் விருது' பெற்ற நூல். பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் பற்றி மிக எளிமையானதொரு புரிதலை ஒரு கதையின் மூலம் உருவாக்குகிறது. நல்ல, கெட்ட என்ற சொல்லுக்கு பதிலாக பாதுகாப்பான, பாதுகாப்பற்ற என்னும் சொற்களை ஆசிரியர் பயன்படுத்தியது மிகச் சிறப்பு.

இயற்கை மற்றும் விலங்குகள் சார்ந்த கதைகளை குழந்தைகளுக்கு புரியும்படி எளிமையாக எழுதும் எழுத்தாளர் கன்னிக்கோவில் ராஜா, லாலிபாப் சிறுவர் உலகம் என்ற பதிப்பகத்தை நிறுவி நிறைய சிறார் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார். இன்னும் பல சிறந்த எழுத்தாளர்கள் பல அற்புதமான சிறார் புத்தகங்களைத் தந்துள்ளனர். இந்த புத்தங்கள் எல்லாம் அதன் வாசகர்களிடம் சென்று சேர்ப்பதே அந்த எழுத்தாளர்களுக்கு நாம் தரும் மிகப்பெரிய அங்கீகாரம்.

குழந்தைகள் வாசிப்பு நோக்கி நகராமல் இருப்பதற்கு காரணம் புத்தகம் தேர்வு செய்வதில் நாம் செய்யும் தவறாகவும் இருக்கலாம் . ஜே.கே. ரவுலிங் கூறியது "உங்களுக்கு வாசிக்க பிடிக்கவில்லை என்றால் நீங்கள் இன்னும் சரியான புத்தகத்தை தேர்ந்தெடுக்கவில்லை".

குழந்தைகள் அவர்களாகவே அவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை தேர்வு செய்யட்டும். அவர்களுக்கு இதுதான் பிடிக்கும் இதுதான் சரியானது என்று நீங்களாக எதையும் தேர்வு செய்து கொடுப்பதை விட அவர்களுக்கு எது பிடித்தமானதோ அதனைத் தேர்வு செய்ய அனுமதியுங்கள். இந்த நேரத்தில் வாசிக்க வேண்டும், இவ்வளவு நேரம் வாசிக்க வேண்டும், இப்படித்தான் வாசிக்க வேண்டும் என்கிற எந்த நிர்பந்தனையும் விதிக்காமல், அவர்களுக்கான சுதந்திரம் தரப்படும்போது, வாசிப்பு ஒரு பேரானந்த அனுபவமாக நிகழும் என்பது திண்ணம்.

'சிறார் வாசகர்கள் பெருகட்டும் சிறார் இலக்கியம் வளரட்டும்'.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2025 வெளியிடப்பெற்றது.